<u>**Sub Court, Eraniel**</u>

O.S. No.80/2019
Date: 18.02.2026.
DW1 - திரு.நாகராஜன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய ஒப்பந்தம் பற்றி எனக்குத் தெரியும். கிரய ஒப்பந்தத்தில் உள்ள சொத்து 2 வருவாய் கிராமங்கள் கடியப்பட்டிணம் மற்றும் குருந்தன்கோட்டில் அமைந்தவை என்றால், சரிதான். இந்த 2 கிராமங்களிலும் உள்ள சொத்துக்கள் ஒன்றாக சேர்ந்து ஒரே கிடப்பாக 13 சென்ட் ஒன்றாக உள்ளது என்றால், சரிதான். அந்த சொத்து எனக்கு விலை ஆதாரம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி கிடைத்தது என்றால், சரிதான். விலை கிரய ஒப்பந்தம் போடும் போது, நான் 8.500 சென்ட்க்கான அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை வாதி பத்மனாப பிள்ளையிடம் கொடுத்தேன். எனது கிரய ஆவணத்தின் ஒளி நகலை வாதியிடம் கொடுத்தேன் என்றால், சரிதான். அதனுடம் அந்த சொத்திற்கான கரம் கட்டிய ரசீதும் கொடுத்தேன். விலை ஆதாரத்தின் அசலை விலை ஆவணம் எழுதும் முன் தருவேன் என்று குறிப்பிட்டேன் என்றால், வட்டிக்கு பணம் கேட்ட போது ஆவணம் கேட்ட போது நகலை கொடுத்தேன். இந்த வழக்கில் வாதியின் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். படித்த பின்னர் தான் எதிர் வழக்குரைக்கு விபரங்கள் கூறினேன் என்றால், சரிதான். எனது வழக்கில் வட்டிக்கு பணம் கேட்டதால் தான் அசல் ஆதாரம் தருவேன் என்று நான் கூறியதாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வழக்கில் வாதி வெவ்வேறு தேதிகளில் நான் மொத்தம் ரூ.6,00,000/- பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டு இருக்கிறார், சரிதான். அவ்வாறு ரூ.6,00,000/- வாங்கி கொண்டு நான் கையொப்பம் போட்டுக் கொடுக்கவில்லை என்று நான் எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால், அது விபரம் எனக்கு தெரியாது. வழக்கிற்கு வேண்டி தற்போது என்னுடைய முதல் விசாரணையில் தான் கையொப்பம் என்னுடையது அல்ல என்று நான் குறிப்பிடுகிறேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆ.2 மற்றும் வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள வக்காலத்துகள் 2 எண்ணம் ஆகியவற்றில் உள்ள என்னுடைய 3 கையொப்பங்களும் வித்தியாசமாக உள்ளன என்றால், சரிதான். அதிக வட்டிக்கு பணம் கொடுப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் அதற்கு ஆதரவாக

ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தினை இந்த நீதிமன்றத்தால் பற்றுகை செய்த பிறகு நான் எனது அண்ணன் கண்ணன் என்பவருக்கு கிரயம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. பற்றுகை செய்வதற்கு முன்பே என் அண்ணனுக்கு எழுதி கொடுத்து விட்டேன். இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கிரயம் பதிவு செய்தோம். மணவாளக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய சென்ற போது அங்கு பற்றுகை உத்தரவு இருந்ததால், அங்கு பதிவு செய்ய இயலவில்லை அதனால் உடனடியாக இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பதிவு செய்தோம் என்றால், சரியல்ல. நீதிமன்ற உத்தரவை புறக்கணித்து வேண்டுமென்றே வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் என் சகோதரர் பெயரில் சொத்தை மாற்றி எழுதிக் கொடுத்தேன் என்றால், சரியல்ல. ரூ.4,00,000/- க்கு சொத்தை எழுதி தருகிறேன் என்று வாதியை அணுகினேன் என்று நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. வாதிக்கு தினந்தோறும் ரூ.750/- வீதம் கொடுத்து 100 நாள்களில் ரூ.1,05,000/- பணம் கொடுத்ததாகவும், தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. இவ்வாறு நான் பணம் கொடுத்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் ரூ.4,00,000/- கொடுக்க நான் தயாராக உள்ளதை காட்ட நான் அந்த பணத்தை நீதிமன்றத்தில் கட்டி வைப்பதற்கு நடவடிக்கை இதுவரை எடுக்கவில்லை என்றால், சரிதான். வாதியின் மனு ஒன்றை தாக்கல் செய்து ரூ.5,00,000/- பணத்தை நீதிமன்றத்தில் கட்டி வைத்து, சர்ச்சையுள்ள மீதி தொகைக்கு வழக்கு செய்ய இயலும் என்று மனு தாக்கல் செய்த நிலையிலும் நான் மேற்படி பணத்தை நீதிமன்றத்தில் கட்டி வைக்கவில்லை என்றால், சரிதான். வாதிக்கு தர வேண்டிய பணத்தை திரும்ப தரக்கூடாது என்ற உள்நோக்கத்துடன் நான் இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. முன்னுக்கு பின் முரணாக நான் உண்மை விபரங்களை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்,